PlanetRead

Literacy for a Billion

Movie: Ayyan
Year: 2011

Song: Enakkena oruththi
Lyricist: N A Muthukumar

எனக்கென ஒருத்தி
மண்ணில் பொறந்திட்டா
இது போதும்
என் கண்ணதான் தொறந்து
நெஞ்சில் கலந்துட்டா
இது போதும்
விளையாட்டு தோழியில்ல
தோழியில்ல
வழித்துணைதானே
விளக்கேத்தி வெளிச்சம் தர
வெளிச்சம் தர
வந்தவதானே
பருவம் வந்து அரும்பு விட்ட
மீசையைத்தான்
மறந்தே போனேன்
நீ விரும்பி வந்து
முறுக்கிவிட்டே
அசந்தே போனேன்
எனக்கென ஒருத்தி
மண்ணில் பொறந்திட்டா
இது போதும்
என் கண்ணதான் தொறந்து
நெஞ்சில் கலந்துட்டா
இது போதும்

யாரு வந்தா யாரு போனா
எதுவும் இங்க தெரியல
எந்த பக்கம் திரும்பினாலும்
உந்தன் உருவம் விழியில
வயல் பாயும் தண்ணி சத்தம்
கொலுசு போல கேக்குது
கொழம்பு கொதிக்கும்
ஓசை கூட
வளையல் போல கேக்குது
சாமிகிட்ட இதுவரை நானும்
கேட்டதொண்ணும் இல்லையடி
நோன்பிருந்து
கேட்டிடப் போறேன்
நீ எனக்கு வேணுமடி
உனக்காக உசுரெல்லாம்
உருகுது மானே
எனக்கென ஒருத்தி
மண்ணில் பொறந்திட்டா
இது போதும்
என் கண்ணதான் தொறந்து
நெஞ்சில் கலந்துட்டா
இது போதும்

ஹே
உன்னை பாத்து பேசும்போது
கண்ணை பார்க்க தோணுதே
உன் கண்ணை பாத்து
பேசப்போனா
கவனம் எங்கோ சிதறுதே
இதயம் எனக்கு
துடிக்குதுன்னு
உன்னை பாத்தா புரியுதே
இளமை துடிப்பின்
அர்த்தமெல்லாம்
இன்றுதானே விளங்குதே
மனசிலுள்ள ஆசையினாலே
மலை நடந்து வருவதில்ல
மடியில் வந்து
மேகமும் தவழ்ந்தால்
தடுக்க இங்கு யாருமில்ல
நீதானே விடிகாலை
வழிதரும் மேகம்
எனக்கென ஒருத்தி
மண்ணில் பொறந்திட்டா
இது போதும்

Literacy for a Billion

என் கண்ணதான் தொறந்து
நெஞ்சில் கலந்துட்டா
இது போதும்
விளையாட்டு தோழியில்ல
தோழியில்ல
வழித்துணைதானே
விளக்கேத்தி வெளிச்சம் தர
வெளிச்சம் தர
வந்தவதானே
பருவம் வந்து அரும்பு விட்ட
மீசையைத்தான்
மறந்தே போனேன்
நீ விரும்பி வந்து
முறுக்கிவிட்டே
அசந்தே போனேன்
எனக்கென ஒருத்தி
மண்ணில் பொறந்திட்டா
இது போதும்
என் கண்ணதான் தொறந்து
நெஞ்சில் கலந்துட்டா
இது போதும்

*Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.*

*PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.*